விலை சதம் 10.

# சுதந்திரன்

SUTANTIRAN

வ- ஆ. 2001, சித்திரை 31 உ வியாழன் (14-5-70) ற. அவ்வல் பிறை 7—புத்தகம் 24 இதழ் 36

## உடுப்பிட்டியில் வெற்றி ஜெயக்கொடி அவர்களுக்கே!



### புள்ளி விபரம் கூறும் உண்மை இது!

(நமது நிருபர்)

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதுவரை நடந்த பொதுத் தேர்தல்களில் கிடைத்த வாக்குகளின் புள்ளி விபரங்களை சிறிது கவனித்தால் தமிழரசின் உறுதிமிக்க தலைவர்களிலொருவரான திரு. கே. ஜெயக்கொடி அவர்களின் செல்வாகு வளர்ந்து வந்திருப்பது தெரிகிறது.

இதோ தமிழரசுக் கட்சியின் ஜெயக்கொடி அவர்களுக்கு வளர்ந்து வரும் மக்கள் ஆதரவின் விபரம்.

| | |
|---|---|
| 1960 மார்ச் | 3860 |
| 1960 ஜுலை | 7741 |
| 1965 | 8452 |

(2ம் பக்கம் பார்க்க)

# நேரடி நடவடிக்கையில் இறங்க தமிழரசு கட்சி தயார்!

(நமது நிருபர்)

''சிங்களக் கட்சிகள் தமிழர்களுக்கு ஓர் உரிமையும் கொடுக்காமல் ஆளப்பார்க்கின்றன. அதற்கு மாருக பாராளுமன்றத்தில் நமது பலத்தை நாம் நிலைநாட்ட முடியுமானுல் சிங்களக் கட்சிகள் எமது உரிமைகளைத்



தந்தே தீரவேண்டும். இதற்கு நாம் போட்டியிடும் 19 தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சி வெற்றி பெறவேண்டும். அதன்பின் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும வெளியேயும் நாம்போராட வேண்டும். அதற்கு தமிழினம் தயாரா என்பதே

## போராட்டத்தின் மூலம்தான் தமிழுக்கு சமஅந்தஸ்து பெறமுடியும்!

### தமிழரசுத் தந்தை செல்வா அறிவிப்பு!

கேள்வி. இனத்தின் சுதந்திரத்துக்காகவும் உரிமைக்காகவும் எந்தவித தியாகத்தைச் செய்யவும்இன்னல்களை ஏற்கவும, நாம் தயாராக இருக்கிறேம். கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான போராட்டப்பாதையில் மக்களை வழி நடத்திச் செல்லவும் கட்சி தயாராகவே இருக்கிறது.

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் ஒரு தமிழ்த் தினசரிக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தனிச் சிங்களத்தை நாம் ஏற்றுக்கொண்டதாக சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்கிறுர்கள். நாம் ஒருபோதுமே தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சிங்களச் சட்டத்துடன் தமிழ் மொழிச் சட்டம் இரண்டினுலுமே நாம் இன்று ஆளப்படுகிறேம்—இப்போது அமுலில் இருப்பது தனிச் சிங்களச் சட்டம் அல்ல.

சிங்களத்துடன் தமிழுக்கு சமஅந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டம் எதுவும் இல்லை. இதற்கு தமிழ மக்கள் கட்டுப்பாட்டுடன் அரசாங்கத்துக்கு எதிராக போதிய எதிர்ப்பைக் காட்டி வரவேண்டும். போதிய எதிர்ப்பைக் காட்டுவதானுல் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கவேண்டும். இத்தகைய நடவடிக்கையில் இறங்க கட்சி தயாராக இருக்கிறது. தமிழ் மக்கள்

(2 ம் பக்கம் பார்க்க)

## வேட்பாளரும் வாக்காளனும்

மீசாலையில் (சாவகச்சேரி)

வேட்பாளர்: தான் எம். பியாக இருந்தபோது தொகுதிககு எவ்வளவு வேலைசெய்தேன். உங்கள் எம். பி. என்ன செய்தார்?

வாக்காளர்:- தன் தலைவரை வால்அறுந்த நரியென்று கூறவில்லை.

## கூட்டணிக் கூட்டத்தில் கள்ளத்தோணி கூக்குரல்!

காங்கேசன்துறையில் போட்டியிடும் வி. பொன்னம்பலத்தின் கூட்டணியைச் சேர்ந்த மனலுவே தர்மகீர்த்தி ஸ்ரீ பியரட்ணதேரோ என்ற பிக்கு கட்டுநாயக்காவில் பேசும்போது கீழ்கண்ட விதத்தில் இனத்துவேசமாகப் பேசியுள்ளார். இச்செய்தி 12-5-70 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் காணப்படுகிறது.

'இச்சிறிய இலங்கைத் தீவில் இருதேசிய இனங்களான சிங்களவரும் தமிழரும் சுமுகமாக வாழவேண்டும் என்பது உண்மைதான். ஆனுல் தேசியவாதிகளல்லாதவர்கள் வாழ்வதை நாங்கள் எதிர்க்கின்றேம்,

கடைசிக்'கள்ளத்தோணி' யும் இங்கிருந்து விரட்டப்படும்வரை நாம் எமது இந்தத் தேசியப்போரை நிறுத்தவே மாட்டோம்.

எமது நாட்டைச் சுரண்டி ஒரு தனித்தமிழ் நாட்டை உருவாக்கத் திரு. செல்வநாயகம் முயற்சிக்கிருர்.

ஆனுல் அதை அவர்கள் பிக்குகளின் சடலங்களின் மீதே உருவாக்கமுடியும்.

தமிழர்களுக்கெதிராக விஷம் கக்கியிருக்கும் இந்தத்தேரோ மார்க்ஸிஸ்டுகளுக்காக வக்காலத்து வாங்கியிருக்கின்ஞர்.

## மாணிக்க வாசகருக்கு வரவேற்பு

காந்திநகர், மே 13

கல்குடா தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. பொ. மாணிக்கவாசகருக்கு 5-5-70 மாலை காந்திநகர் அண்ணு - கலை மன்றத்தினர் மாபெரும் வரவேற்பு அளித்தனர். 'இவ்விழாவைதொடங்கி வைத்த அண்ணு கலை மன்றத் தலைவர் திரு. ச. தம்பிஐயா பேசுகையில் எத்தனை எதிர்ப்புகள் எம்மை எதிர்நோக்கி வந்தாலும் எதையும் தாங்கும் இதயம் செந்தமிழராகிய எமக்கு எப்போதும் தேவை'' என வலியுறுத்திக் கூறினுர். ஆ. பொன்னையா, அண்ணு கலை மன்றச் செயலாளர் மூ. மகாதேவன்ஆகியோரும் பேசினர்.

## தமிழரசுக் கட்சிக்கே இருவாக்குகளையும் தருவீர்!

—தங்கத்துரை.



திருமலை, மே 13

''தங்கத் துரைதான் இம்முறை மூதூர் முதல்வராக வருவார். எனவே என்னை இரண்டாவது உறுப்பினர் ஆக்குங்கள் என்று தனித்தனியே யு. என். பி. வேட்பாளரும் எஸ். எல். எவ். பி, வேட்பாளரும் தமிழ் வீடுகள் தோறும் சென்று வாக்குப் பிச்சை கேட்டு தமது

(4 ம் பக்கம பார்க்க)

## வேட்பாளரும் வாக்காளனும்

அராலி (வட்டுக்கோட்டை)

வேட்பாளர்: அப்பு! நானும் வெக்சன் கேட்கிறேன்.

வாக்காளன்: எந்தக் கட்சியிலே?

வேட்பாளர்: எங்கடை பொன்னம்பலம் கட்சியிலேதான்.

வாக்காளன்: நீ நல்ல மனுசன் என்று கேள்வி. போயும் போயும் உந்தக் கள்ளர்களுடைய கட்சியிலேயே கேட்கிருய்?

## வல்வெட்டியில் சாராய மூடை!

(வல்வெட்டி நிருபர்)

வல்வெட்டி கிராமத்தில் அண்மையில் சாராய மூட்டையை இறக்கிய காரொன்று சில தமிழரசு வாலிபர்களைக் கண்டதனுல் ஓடி மறைந்திருக்கிறது. இதைப்பற்றிக் கூறப்படுவதாவது:—

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணியளவில் வல்வெட்டி தமிழரசு வாலிப முன்னணி வீரர்கள் சிலர் வந்துகொண்டிருந்தபோது ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் சந்தேகத்துக்குரிய சூழலில் மாற்றுக் கட்சி ஆதரவாளர்களின் காரொன்று

(2-ம் பக்கம் பார்க்க)


## எத்தனை துன்பங்கள் நேரிடினும் இனவிடுதலைப் போரை தொடருவோம்!

### குருநகரில் கதிரவேற்பிள்ளை உறுதி!

''இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையெல்லாம் இழக்கத் தொடங்கியது ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு மந்திரியான பிறகுதான். அவர் மந்திரியாகி அதிகாரம் செலுத்தத் தொடங்கவும் தமிழர்களும் தமது உரிமைகளைத் தியாகம் செய்யத் தொடக்கிவிட்டார்கள்.

இவ்வாறு தமிழரசின் கோப்பாய் வேட்பாளர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை அவர்கள் குருநகரில் யாழ் வேட்பாளர் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அவர்களை ஆதரித்து நடந்த கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது—

(2-ம் பக்கம் பார்க்க)



## வேட்பாளரும் வாக்காளனும்

கொல்லன்கலட்டி—காங்கேசன்துறை

வேட்பாளர்: வேல் வேண்டுமா? சிலுவை வேண்டுமா?

வாக்காளர்: (வயோதிப மாது) உந்த வியாபாரம் எப்ப தொடங்கினனீங்கள்?

## தினபதியாரின் 'மாபெரும்' சாதனை!

(நமது நிருபர்)

எந்தச் செய்தியையும் முந்தித்தருவது தானேதான் என்று தம்பட்டமடிக்கும் தினபதியார் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றின் செய்தியைப் பிரசுரிக்க எவ்வளவுகாலமெடுத்தது தெரியுமா? மொத்தம் 20 நாட்கள். 20நாட்கள் சென்று பிரசுரித்தும் கூட அச்செய்தியை திரித்து, பொய்களை அடுக்கியே பிரசுரித்திருக்கிருர். பரிதாபம்! 20 நாட்கள் இசசெய்தியைப் பிரசுரியாமல் வைத்திருந்து, அதை எப்படி திரிக்கலாம் என்று தினபதியார் ஆலோசனை செய்திருக்கலாம் என்றே தோன்றுகிறது.

தினபதியின் குறித்த செய்தி எது தெரியுமா? கொழும்பில் நாலாம் குறுக்

(2ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## கொள்கையற்றவர்கள் குதர்க்கம் பேசுகிறார்கள்

**ஊ**ர்காவற்றுறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு அபரிமிதமான செல்வாக்கு நாளிலும் பொழுதிலும் அதிகரித்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

தமிழரசுக்கட்சிக்கு எதிராக திரு. வி. நவரத்தினம் சுமத்தி வந்த அபாண்டமான கற்பனைக் குற்றச்சாட்டுக்கள் அத்தனையும் புளியங்கூடல் பொதுமேடையில் வைத்து தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களினால் பொடிப் பொடியாக்கப்பட்டதன் பின் தமிழரசுக்கட்சிமீது தீவுப்பகுதி மக்களுக்கு இருந்துவந்த கொஞ்ச நஞ்ச சந்தேகங்களும் தீர்ந்துவிட்டன. தன்மானமும் தமிழுணர்வும் நிறைந்த தீவுப்பகுதி மக்கள் கோணல் வழி செல்பவர்களல்லர்; அவர்கள் கொள்கை வீரர்கள்; கட்சி விட்டு கட்சி மாறுபவர்களல்லர்; தமிழரசுக் கட்சிமீதும், தமிழரசுத் தந்தை செல்வாமீதும் மாறாத பற்றும், பாசமும் கொண்டவர்கள்; என்பதை பண்டிதர்மீது அவர்கள் சொரிந்துவரும் அன்பும் ஆதரவும் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டிவருகின்றன.

தீவுப்பகுதி தமிழரசுக்கட்சியின் கோட்டை. தனி மனிதரைப்பற்றிக் கவலைப்படாமல் கொள்கைக்காக வாக்களிக்கும் அரசியல் தெளிவுபெற்றவர்கள் தீவுப்பகுதி மக்கள் என்பதை நாடு முழுவதுமே அறியும். 1956ம் ஆண்டிலிருந்துகாலஞ்சென்ற அமரர்வீ.ஏ. கந்தையாவையும், பின்னர் வி. நவரத்தினத்தையும் தீவுப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக தேர்ந்தெடுத்து வந்திருக்கிறார்கள் என்றால் தனி மனிதர் கந்தையாவுக்கோ, தனிமனிதர் நவத்துக்கோ அவர்கள் வாக்களிக்கவில்லை: தமிழரசுக்கட்சிக்கே வாக்களித்தனர்; தந்தை செல்வாவின் அரசியல் தலைமைக்கே வாக்களித்தனர். அதனால்தான் இன்றும் தமிழரசு வேட்பாளராக போட்டியிடும் பண்டிதர் இரத்தினத்துக்கு தங்கள் ஆதரவை அள்ளிச் சொரிந்து வருகிறார்கள்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த யாரையும் கேளுங்கள்—தேர்தல் நிலைமை எப்படியென்று. பண்டிதர் இரத்தினமே வெல்லுவார்; பெரும்பான்மை எவ்வளவு என்பதிலேதான் இப்போது போட்டியென்று உடனே பதில்வரும். இப்படி பண்டிதர் மகோன்னதமான வெற்றி பெறப் போகிறார் என்ற செய்தி பண்டிதரினால் மூக்கறுபட்ட பத்திரிகையொன்றுக்கு கிலியை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் அது பீதி கொண்டு அலறியடிக்க ஆரம்பித்திருக்கிறது. "மூளையை" எப்படி கரைசேர்ப்பது என்று தெரியாமல் முக்கி முனக ஆரம்பித்திருக்கிறது.

பண்டிதர் இரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடப் போகிறார் என்ற செய்தி வெளிவந்த நாட் தொடக்கம் இப்பத்திரிகை பண்டிதருக்கு எதிராக நாளாந்தம் கடைந்தெடுத்த பொய்களை பிரசுரித்தே வந்திருக்கிறது. இதன் காரணமாக ஒரு தடவையல்ல—இரு தடவையல்ல—மூன்று தடவைகள் பண்டிதர் காலில் விழுந்து மண்டியிட்டுமன்னிப்புக்கேட்டும் இப்பத்திரிகை திருந்தவில்லை. மீண்டும் மீண்டும் பொய்களை எழுதி தீவுப்பகுதி மக்களை திசை திருப்ப முடியுமா என்றே முயற்சி செய்து வருகிறது. தீவுப்பகுதி மக்கள் சிந்திக்கத் தெரியாத மூடர்கள்; அவர்களை ஏமாற்றி விடலாமென்று கருதும் மூளைக்கு வக்காலத்து வாங்கும் இப்பத்திரிகையும் தப்புக்கணக்குப் போடுகின்றது.

13-5-70ல் வெளிவந்த இப்பத்திரிகையின் வார இதழில் பண்டிதர் அவர்களைத் தாக்கி ஒரு முழுப்பக்கக் கட்டுரையொன்று வெளிவந்திருக்கிறது. விஷமத்தனமும் பொய்யும் அதில் நிறைந்து காணப்படுகிறது. இக்கட்டுரையில் பண்டிதர் அவர்களை தீவுப்பகுதிக்கு போட்டிக்கு நிறுத்தியது, தீவுப்பகுதி மக்களுக்கு இரண்டு பா: உக்கள் கிடைக்காமற் செய்வதற்கு செய்யப்பட்ட சதி நடவடிக்கையென்று தீவுப்பகுதி மக்களை நம்ப வைப்பதற்கு முயற்சியெடுக்கப்பட்டு இருக்கிறது.

இது மிகவும் கேவலமான—அற்பத்தனமான—அயோக்கியத்தனம் நிறைந்த பிரசாரமாகும். தமிழரசுக் கட்சியையும் தீவுப்பகுதி மக்களையும் பிரிந்து விட முயலும் சின்னத்தனம் இது. இச்சின்னத்தனத்தில் தீவுப்பகுதி மக்கள் கொஞ்சம் கூட சிக்கமாட்டார்கள். ஏனெனில் தமிழரசுக் கட்சி பிரதேச வேறுபாடுகள், ஊர், சொந்தம் பந்தம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து தமிழினத்துக்காக பணியாற்றும் ஓர் விடுதலை இயக்கம் என்பது தீவுப்பகுதி தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்த ஓர் உண்மையாகும்.

பண்டிதர் அவர்களை ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு நிறுத்துவதும், நிறுத்தாததும் தமிழரசுக் கட்சியும், கட்சியின், கிளிநொச்சி, ஊர்காவற்றுறை தொகுதிகளின் மாவட்ட கிளைகளும் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினையாகும். தீவுப்பகுதி மக்களின் பூரண சம்மதத்தைப் பெற்றே தமிழரசுக் கட்சியின் சார்பில பண்டிதர் அங்கு போட்டியிடுகிறார். எனவே பண்டிதருடன் நேருக்கு நேர் நின்று கொள்கையைச் சொல்லி வாக்கு கேட்க வக்கற்றவர்கள் இந்தக் குதர்க்கத்தில் இன்று ஈடுபடுகிறார்கள். இதில் ஏமாறுவதற்கு தீவுப்பகுதி மக்கள் ஏமாளிகள் அல்லர் என்று நாம் திடமாகக் கூறுகிறோம்.

"தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி கடந்த காலத்தில் தீவுப்பகுதிக்கு உறுப்பினராக இருந்தும்கூட தீவுப்பகுதித் தேவைகளை நிறைவேற்றவில்லை" என்று பண்டிதர் ஒருகூட்டத்தில் கூறியதைச் சுட்டிக்காட்டி அமரர் வீ. ஏ. கந்தையாவையும் பண்டிதர் கேலி செய்திருப்பதாக குடம் குடமாக முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறது இப்பத்திரிகை. இது இப்பத்திரிகை ஆசிரியருக்கு பண்டிதரின் தமிழ் புரியாததனால் இந்த கோளாறாகும்;

பண்டிதர் பேச்சை சரியாக கவனியுங்கள். "தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி உறுப்பினராக இருந்தும்கூட" என்றுதான் பண்டிதர் கூறியிருக்கிறாரே தவிர "தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள், உறுப்பினர்களாக இருந்தும் கூட" என்று பண்டிதர் குறிப்பிடவில்லை. பிரதிநிதிகள் என்று குறிப்பிட்டிருந்தால்தான் திரு. வீ. ஏ. கந்தையாவையும் உள்ளடக்கும்; எனவே கடந்த 5 ஆண்டுகள் பதவிவகித்த பிரதிநிதி மீதுதான் திரு. இரத்தினம் குற்றம் சுமத்துகிறார் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

பண்டிதரின் இக்குற்றச்சாட்டுக்கு நேரடியாக பதிலளிக்கமுடியாமல் திரு. நவரத்தினம் பரிதவிக்கையில் அவருக்கு கைகொடுக்க வீ. ஏ. கந்தையாவையும் இழுத்து வைத்துக்கொண்டு குதர்க்கம் பேசுகிறது சிங்கள முதலாளிகளின் தமிழ்ப்பத்திரிகை;

இக்குதர்க்கவாதங்களை முறித்தெறிந்து தீவுப்பகுதி மக்கள் பண்டிதருக்கு வெற்றி மாலை சூடி, பொய்யர்களை புறமுதுகிட்டோட விரட்டியடித்து தந்தை செல்வாவின் அணியின் கீழ் மே 27ம் நாள் மீண்டும் ஒன்றுபடுவார்கள் என்பதில் நமக்கு கிஞ்சித்தும் ஐயமில்லை—

### தினபதியாரின்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தெருவில் பண்டிதர் இரத்தினத்துக்கு ஆதரவாக தீவுப்பகுதி மக்கள் நடத்திய கூட்டச் செய்திதான், அது. கூட்டம் நடந்தது ஏப்ரல் 22ந் திகதி; அது தினபதியில் திரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது மே 12ந் திகதி. இது தான் தினபதியாரின் மகத்தான 'சாதனை'!

'இக்கூட்டத்தில் சத்தியாக்கிரகப் பணம் பற்றியும். குடியேற்றக் காணிகளில் சென்று குடியேறுவது பற்றியும் திரு. திருச் செல்வத்திடம் கேட்கப்பட்டதாகவும் திருச்செல்வம் பதில் சொல்ல முடியாது வேர்த்து விறுவிறுத்ததாகவும் தினபதியார் கூறியிருப்பது அப்பட்டமான பொய். இப்படிப்பட்ட சம்பவம் எதுவும் மேற்படி கூட்டந்தில்நடக்கவேயில்லை'

—இவ்வாறு தெரிவிக்கின்றனர் இக்கூட்டத்துக்கு தலைமைவகித்த திரு. சுப்பையாவும், கூட்ட அமைப்பாளர்களான திரு. திருவிளங்கம், திரு: மதியாபரணம் ஆகியோரும். 20 நாள் கழித்து பொய்ச் செய்தி வெளியிட்ட தினபதியாரால் தனது செய்தியை நிரூபிக்க முடியுமா என்றும் அவர்கள் சவால்விடுகின்றனர்.

——

### யாழ்ப்பாணம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவை குடியரசாக்க முற்படுவார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்து ஒருசில வருடங்களிலேயே தன்னை குடியரசாக்கியது. ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்து 22 வருடங்கள் ஆகியும் இது வரை தன்னை குடியரசாக்கவில்லை.

ஆனால் வருகிற குடியரசு பிரகடன அரசியல் மாற்றத்தில் தமிழ்ப்பேசும் மக்கள் ஒரே கட்சியின் கீழ், ஒரே தலைவரின் கீழ் இயங்கினால்தான் எமது தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப்பெறலாம் தவறினால் மீண்டும் நிரந்தர அடிமையாகவே தமிழினம் வாழவேண்டிய நிலை ஏற்படும்.

——

### நேரடியாக நடவடிக்கை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. அப்படிப் பாடுபடத் தயாராக இருந்தால் சம அந்தஸ்து கிடைக்கும், இல்லாவிடின் கிடையாது"!

——

### உடுப்பிட்டியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதிலிருந்து என்ன தெரிகிறது? உடுப்பிட்டி மக்கள் திரு. ஜெயக்கொடிக்கு ஆதரவாக தமிழரசின் கொள்கைகளை நோக்கி மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வந்திருக்கிறார்கள் அல்லவா? இதிலிருந்து பார்க்கும்போது உடுப்பிட்டித் தொகுதியில் இம்முறை வெற்றி திரு. ஜெயக்கொடிக்கே!

### எத்தனை துன்பங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழர்களின் ஜீவாதார உரிமைகளுக்காகப் போராடும்போது என்னென்ன தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்று தமிழரசுக் கட்சியினர்க்கு நன்றாகத் தெரியும். 1956ல் காலிமுகத் திடலில் குண்டர்களாலும் காடையர்களாலும் குரூரமாகத் தாக்கப்பட்டவர்கள் உரிமை கேட்ட தமிழரசுத் தலைவர்களும், தொண்டர்களும்தான்: 1958ல் இனக் கலவரத்தின்போது தமிழர்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவிக்கவேண்டியிருந்தும், 1960ல் சாத்வீகமான சத்தியாக்கிரகம் செய்த தமிழரசுத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோதும் கூட நாம் எமது விடுதலையுணர்வையும், போராட்டத்தையும் நிறுத்திவிடவில்லை.'

'ஆனால் ஜி. ஜி. பொன்னம்பலமோ நாளுக்கு நாள் குட்டிக்கரணம் போட்டு முன்னுக்குப் பின் முரணாக நடந்துகொள்கின்றார்.'

1936ன் பின் ஜி ஜி. வடமாகாண மக்கள் மத்தியில் இனத் துவேஷத்தைப் போதித்துப் பரப்பித்தான் அரசியலில் பிரபல்யமடைந்தார். ஆனால் 1948ல் அவர் டி. எஸ். சேனநாயக்கா அரசாங்கத்தில் ஒரு மந்திரிப் பதவியை வாங்கிக்கொண்டதுமே தனது இனத்துவேஷ சுலோகங்களை அடக்கிக் கொண்டார்.

இத்தோடுதான் தமிழர்களின் உரிமை இழப்பும் தொடங்கியது. அப்படி இழந்த உரிமைகளையெல்லாம் மீட்டுக் கொடுப்பதற்காகவே தமிழரசுக் கட்சி தோன்றியது. 1952ல் இரண்டே அங்கத்தினருடன் பாராளுமன்றத்தில் போராடிய தமிழரசு படிப்படியாக வளர்ந்து தமிழர்களின் நம்பிக்கை பெற்ற மாபெரும் கட்சியாக இன்று போராடி வருகிறது. எனவே தமிழரசுக் கட்சியை ஆரம்பிப்பதன் மூலமே ஈழத்தில் தமிழன் தமிழனாக வாழ முடியும்.

——

### வல்வெட்டியில் சாராய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


நிற்பதைக் கண்டு பார்க்க முனைந்தபோது அக்காரிலிருந்து சாராய மூடைகளிறக்கப்படுவதைக் கண்டார்கள். உடனே அந்தக் கார் ஓடி மறைந்துவிட்டது.

இப்போது வல்வெட்டி வாலிபர்கள சாராய மூடைகளைக் கைப்பற்றிப் பொலீசில் ஒப்படைப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தேர்தலை முன்னிட்டு சாராயம், சேலை, துணிகளும் உடுப்பிட்டித் தொகுதியில் நடமாடுவதாகக் கூறப்படுவதால் மக்கள் இவ்வேலையிலீடுபட்டிருக்கும் துரோகிகளை முறியடிக்க ஆயத்தமாயிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தமிழரசுப் படைவீரர் வரிசை (5)

## கல்குடாவின் மாணிக்கம் மாணிக்கவாசகர்



மட்டக்களப்பு ஏறாவூர் பகுதிக்குச் சென்று உங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உழைத்த சிறந்த ஒரு பிரமுகரைக் கூறுங்கள் என்றால் எல்லோரும் ஏகமனதாக பொ. மாணிக்கவாசகம் என்பார்கள். ஏனென்றால் கிராம சபைச் தலைவராக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டுத் தமது மக்களுக்கு அவர் செய்த சேவை அபரிமிதமானது.

1960 மார்ச்சிலும் 1960 ஜூலையிலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இவர் மாபெரும் வெற்றியீட்டி நாடாளுமன்றப் பிரதிநிதியாகச் சேவை செய்தார்.

அந்த ஐந்தாண்டு காலத்தில் அவர் புதுப்பித்த பழைய குளங்களும், புதிதாக உருவாக்கிய குடியேற்றத்திட்டங்களும் எத்தனையோ. அவற்றினலெல்லாம் அப்பகுதி மக்கள் அடைந்த நன்மைகள் அனந்தம்.

கிருஷிகத் துறையில் திரு. பொ. மாணிக்கவாசகம் அவர்கள் ஒரு ஜாம்பவான். அதனால்தான் இவரைப் பற்றிக் கூறும்போது 'அரசாங்க நில அளவைப் பகுதியினர்க்கோ, நீர்ப்பாசன இலாகாவுக்கோ தெரியாத பாழடைந்து தூர்ந்துபோன காடுகளின் நடுவே இருக்கும் பண்டைப் பெருமை வாய்ந்த குளங்கள் பற்றிய எல்லா விபரங்களும் திரு. மாணிக்கவாசகருக்கே தெரியும்? என்று கிழக்குப் பகுதி அரசாங்க மேலதிகாரிகளே கூறுவார்கள்.

இவ்வளவு ஆர்வத்துக்கும் காரணம் அவருக்குத் தமிழ் பேசும் மக்கள் மீதும், அம்மக்களின் பாரம்பரியமான பிரதேசங்கள் மீதுள்ள நல்லெண்ணத்தினாலேயேயாகும். கல்குடா பிரதேசம் அப்பகுதியின் பழங்குடிகளுக்கே சொந்தமானதாயிருக்கவேண்டும். அதனால் அப்பிரதேசத்தையே பொன் கொழிக்கும் பூமியாக்கிடவேண்டும் என்பதே அவரின் வேணவா;

இப்படியாக அவருக்கு எமது இன மக்களின் வாழ்விலும், பிரதேசத்திலும் அக்கறை இருந்த தனலேயே அவரால் தமிழரசுக் கட்சியில் இணைய முடிந்தது.'

ஆமாம்! திரு.பொ. மாணிக்கவாசகம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்

(4ம் பக்கம் பார்க்க)

''யாழ்ப்பாணக் கச்சேரியில் தனிச்சிங்களத்தில் மட்டுமே நிர்வாகம் நடந்துகொண்டு வருகின்றது என்று சில மாற்றுக்கட்சியினர் கூறி வருகின்றனர். நான் அதைச் முற்ருக எதிர்ப்பதுடன் கச்சேரி முறையையே போய் பார்த்துக்கொண்டு வரும்படி சவால் விடுகிறேன். சிங்களத்திற்கும், தமிழிற்கும் சமஅந்தஸ்து கொடுக்கப்பட்டிருந்த போதும் சிங்களத்தில் கச்சேரி முறையை நடாத்த பயந்த அரசினர் ஆங்கிலத்திலும். தமிழிலும் மட்டும்தான் நிர்வாகத்தை நடத்தியிருக்கின்றனர்.''

இவ்வாறு நல்லூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

தமிழினத்திற்கு சில உரிமைகள் கொடுக்கப்பட்டபோதும் அந்த உரிமைகள் சிங்களத்துக்கிருக்கும் உரிமைகளை விட கூடிவிட்டது; கொடுக்க வேண்டாமென்று வேலை நிறுத்தம் செய்து கிளர்ச்சியை உருவாக்கிய இடதுசாரிகள் இன்று வடமாகாணத்தில் போட்டியிடுகின்றனர். இந்த எத்தர்களின் கூட்டத்திற்கு எமது மூவேந்தர் பரம்பரையில் வந்த தமிழினம் வாக்களிக்க வேண்டுமா?

இந்துப் பல்கலைக்கழகத்தைக் கோரியவர்கள், தமிழ்ப் பிரதேசமாகிய, கோணேஸ்வரப்பெருமான் குடிகொண்ட திருகோணமலை பிரச்சினையில் தலையிட்டார்களா?

சென்ற முறை இழந்த கல்குடா, வவுனியாத் தொகுதிகளை இம்முறைநிச்சயம்எமது கட்சி பெற்றுக்கொள்ளும்.

எனக்கு தலைவீக்கம் கூடிவிட்டதாக சில அரசியல் வாதிகள் கூறித்திரிகிருர்கள். உண்மைதான், எப்போதென்ருல் 56ம் ஆண்டிலே காலிமுகத்திடலிலேயும்61ம் ஆண்டு யாழ் கச்சேரியிலே தமிழினத்தின் விடுதலைக்காக போராடியபோதும் மிருகத்தனம் கொண்ட இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சமயத்தில் எனது தலை வீங்கியது உண்மைதான். இதை நான் மறுக்கவில்லை மறைக்கவில்லை.

சி. கதிரவேலுப்பிள்ளை பேசியதாவது:-

எதிர்வரும் பொதுத்தேர்தல் எமது மக்களுக்கு ஒரு முக்கியமான பொதுத்தேர்தலாகும். சிந்தித்து செயலாற்றவேண்டிய திருநாள் தான் மே 27. பல முறை தோற்றதற்காகவோ, அல்லது வேட்பாளர்களின் பிள்ளை குட்டிக்காகவோ, அன்றி அழுகைக்கும், கண்ணீருக்குமாகவோ வாக்களிப்பதில்லை.

எந்தக்கட்சி தமிழினத்திற்காக இதுவரை பாராளுமன்றத்திலும், வெளியிலும் போராடியதோ அந்தககட்சிக்கே வாக்களியுங்கள். தமிழரசுக்கட்சி தமிழ்ப்பேசும் மக்களை நேர்மையான வழியில், அமைதியான வழியில் இதுவரை இயக்கி வந்திருக்கின்றது.

1965ம் ஆண்டு டட்லி சேனநாயக்காவை பிரதமராக்கி, தமிழினத்தின் உரிமைகளை ஒரளவில் பெற்றுக்கொடுத்துள்ளோம். ஆனுல் வேறு கட்சி தங்களுக்கு மந்திரிப்பதவியைப் பெற்று தமிழினத்தின் உரிமைகளை விற்றது. இதுதான் இன்றிருக்கும் இருபெரும் கட்சிகளுக்கிடையில் உள்ள வித்தியாசம்.

பதவியேற்று தமிழினத்தின் உரிமைகளை விற்கும் கட்சிக்கா, அல்லது பதவியைக் கொடுத்து உரிமைகளைப் பெறும கட்சிக்கா நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்பதை சிந்தித்து செயலாற்றுங்கள்.

# யாழ்ப்பாணம் கச்சேரியின் அலுவல்மொழி சிங்களமல்ல!

## மு. சிவசிதம்பரத்துக்கு அமிர்தலிங்கம் பதில்!

தமிழ் மக்களுக்கென ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகம் வேண்டுமென்று, கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதிநிதிகளில் 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரினர்; அதே நேரத்தில் அதற்கு மாருக 3 உறுப்பினர்கள் இந்துக் கலாச்சார பல்கலைக் கழகம், யாழ்ப்பாணத்திலே வேண்டும் என்று தடுத்தார்கள். இதனுல் கடந்த காலம் வரை தமிழ்ப் பல்கலைக் கழகத்தை தடுத்து வைத்த பெருமை மாற்றுக்கட்சியினருக்கே உரியது.

தமிழினத்திற்கிடையில் இதுவரை இரண்டு பெரும் பிரிவுகள் ஏற்பட்டிருந்தது. அதை இன்று ஓரளவில் மாற்றியமைந்த சாதனை எமது கட்சிக்கே உரியது. பலாத்கார முறையை தவிர்த்து, பெரும்பான்மை தமிழ் மக்களின் சம்மதத்தோடு சிறுபான்மை தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தோம். இதற்கு மாருக சில மாற்றுக்கட்சிகள் இரண்டு பக்கத்தையும், தூண்டிவிட்டு வேடிக்கை யார்த்துக் கொண்டிருந்தது.



டாக்டர். இ. மு. வி. நாகநாதன் பேசும் போது கூறியது:—

தமிழினத்திற்கு அழிவைத் தேடிக்கொடுக்கக்கூடிய திட்டங்கள் சோல்பரி குழு திட்டம், மற்றது ஒற்றையாட்சித் திட்டம். இந்த இரண்டினுலும் இலங்கை அரசியலைப் பொறுத்தவரை பெரும்பான்மை இனமான சிங்களவர்களே நன்மையடைவார்கள். ஒருபோதும் தமிழ் மக்களுக்கு நன்மைகிடைக்காது. அதனுலேயே ஒற்றையாட்சியை எதிர்த்தது சமஷ்டி அரசாங்கமே வேண்டும் என்று தமிழரசுக்கட்சியை அமைத்தோம். சமஷ்டிக் கொள்கையை நாங்கள் ஒருபோதும் கைவிட்டதில்லை. கை விடவும் மாட்டோம். சமஷ்டிக்காக எதிர்காலத்தில் எந்த வகையில் போராடவேண்டுமோ அந்த வழிகளில் நிச்சயம் போராடி வெற்றி காணுவோம். நாமே நம்மை ஆளுவது தவரு? இப்போது சிங்களவர் ஆளும் இனமாகவும், தமிழ்மக்கள் ஆளப்படும் இனமாகவும் இருக்கின்ருர்கள். இதை முற்ருக மாற்றி அமைக்கவே சமஷ்டிக்காக போராடுகிருேம்.

இப்போ பல சிங்களக்கட்சிகள் எமது தமிழினத்தை அழிக்க கங்கணம் கட்டிவிட்டது. தமிழினத்தை அழிப்பதென்ருல் எப்படி அழிப்பது படுகொலை செய்தா? இல்லை; தமிழ் மக்களின் தாய்மொழியை மாற்றி, மதத்தை மாற்றி, தமிழினத்தை முற்ருக அழித்துவிடவேண்டுமென்ற ஊக்கத்தையே எடுத்து வருகின்ருர்கள். அதற்கு உதவியான பல தமிழர்கள் இருக்கின்ருர்கள். இவர்கள் எல்லாம் சுயநலவாதிகள். இப்படிப்பட்டவர்களை கூண்டோடு தமிழ்மக்களே அழிக்கவேண்டும்.

எமது தமிழினத்தை, தாய் மொழியை, தாய் மதத்தை பாதுகாக்கவேண்டும் என்ருல் இம்முறை வடக்கு கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் அனுப்பிவையுங்கள். இதுதான் தமிழ் மக்களின் முக்கிய கடமை என்ருர்.

மா. சு. குணராசா (வாலிப முன்னணி அமைப்புச் செயலாளர்) பேசியதாவது:—

எதிர் வரும் தேர்தலின் பின் எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிப் பீடத்திற்கு வந்தாலும் சரி, அந்த அரசாங்கத்தினர் நிச்சயம் இலங்கைத்

(2-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டுத் தமிழர்களுக்குத் துரோகமிழைத்தது யார்?

## பொன்னம்பலமா? செல்வநாயகமா?

1948—இந்திய—பாகிஸ்தானியப் பிரசாவுரிமைச் சட்டமா? | 1967—(திருத்தப்பட்ட) ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தச் சட்டமா?

| அம்சம் | 1948ல் காங்கிரசு ஆதரித்த இந்திய—பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்தினுல் ஏற்பட்ட பலாபலன் | 1967ல் தமிழரசுக்கட்சி ஆதரித்த(திருத்தப்பட்ட) ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தச் சட்டத்தால் ஏற்பட்ட பலாபலன். |
|---|---|---|
| மலைநாட்டுத் தமிழர் குடித் தொகை | எட்டு இலட்சம் பேர் (1948) | பத்து இலட்சம் பேர். (1967) |
| இலங்கைக் குடியுரிமை பெற்ருேர் | 50 ஆயிரம் பேர் $6\frac{1}{4}$ சதவீதம் பேர் | 325 ஆயிரம் பேர், $32\frac{1}{4}$ சதவீதம் பேர். |
| குடியுரிமை யிழந்தோர் | 93 முக்கால் சதவீதம் பேர். | 55 சதவீதம் பேர், இவர்களுக்கு இந்தியப் பிரசாவுரிமை வழங்க இந்தியா ஒத்துக் கொண்டது. |
| தாமாகவே இந்தியா செல்ல ஒப்புக்கொண்டோர் | ——— | 55 வீதம் பேர். |
| நாடற்ருேர் | 93 முக்கால் வீதம் பேர் | $12\frac{1}{2}$ வீதம் பேர்: இவர்களுக்கு எதிர் காலத்தில் இலங்கை அரசு குடியுரிமை வழங்க வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. |
| தேர்தலில் தெரிவுசெய்யப்படக்கூடிய எம். பி. பதவியை இழந்தோர் எண்ணிக்கை | எட்டுப்பேர். தொண்டமான் அஸீஸ் வெள்ளையன் சுப்பையா முதலிய எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் 1952 தேர்தலின் போது தெரிவு செய்யப்பட முடியாத நிலைக்காளாகினர். | யாருமில்லை |
| எதிர்கால எம். பியாக வரக்கூடிய மலைநாட்டு தமிழரின் எண்ணிக்கை | ஒன்றுமில்லை | 10 மலைநாட்டுத் தமிழ் எம். பிக்கள் தெரியப்படக்கூடிய வாய்ப்புண்டு. |
| இந்திய வாக்காளர் காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய சிங்களத் தொகுதிகளின் எண்ணிக்கை | ஒன்றுமில்லை | இருபது தொகுதிகள். |
| இச்சட்டங்களை ஆதரித்த சிறுபான்மையோர் கட்சிகள் | தமிழ்க் காங்கிரஸ் எம்; பீக்களில் நால்வர் மட்டுமே. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது நண்பர்களும். | (1) தமிழரசுக் கட்சி. (2) தமிழ்க் காங்கிரஸ் (3) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (4)ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் (5) இலங்கைத் தொழிலாளர் கழகம். |
| ஆதரித்த மலைநாட்டுத் தமிழ் மக்கள் | ஒருவருமில்லை | பத்து இலட்சம் பேர். |
| இச்சட்டங்களை எதிர்த்த சிறு பான்மையோர்; | (1) மலைநாட்டுத் தமிழர் அனைவரும் (2) இலங்கை இந்திய காங்கிரஸ். இந்தியப் பிரதமர் நேரு. திருவாளர்கள் வன்னியசிங்கம், தந்தை செல்வநாயக சிவபாலன் ஆகிய பா. உறுப்பினர். | எவருமே எதிர்க்கவில்லை. தமிழ்க் காங்கிரசும் இதற்குச் சார்பாக வாககளித்தது. ஜீ. ஜீ. யும் இச் சட்டத்தை ஆதரித்துப் பேசினுர். |
| தீர்ப்பு | மந்திரிப் பதவிக்காக சொந்த மலைநாட்டுத் தமிழரை அந்த மாற்ருனுக்குக் காட்டிக் கொடுத்துக் கழுத்தறுத்த காக்கைவன்னியன் சட்டம—1948 குடியுரிமைச் சட்டம். | நாடற்று, நகரற்று, சொந்த ஊரற்று, நடுக்கடலில் நின்ற சொந்தச் சகோதரனுக்கு—நாடு கொடுத்து நகர் கொடுத்து சொந்த ஊர் கொடுத்து வாழ் வளிக்க நம் தந்தையின் ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட சட்டம்—1967 ஸ்ரீமா—சாஸ்திரி (திருத்தப்பட்ட) ஒப்பந்தச் சட்டம். |

ஆக்கம்:
உருத்திர சங்காரம்

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

## தமிழரசுத் தழல் மொழிகள்

வீரத்துக்கும் மானத்துக்கும் பெரும்பான்மை சிறுபான்மை என்று அளவுகள் இல்லை. எங்களை எதிர்ப்பது மிகப்பெரிய சூறாவளியாக இருந்தாலும் அதை எதிர்த்து நாங்கள் போராடியே தீருவோம்!

—தளபதி அமிர்தலிங்கம்.

# தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கும்வரை போராடிக் கொண்டே இருப்போம்

## மருதமுனையில் இராசமாணிக்கம் முழக்கம்!

மருதமுனை, மே 13

'எனது பட்டிருப்புத் தொகுதியோடு மருதமுனைக் கிராமம் இணைந்திருந்த காலத்திலும் நான் பல தேர்தல்களில் மருதமுனை வாக்காளப் பெரு மக்களுடன் ஒன்றிப் பழகியவன். ஜனாப் மசூர் மௌலானாவுக்காக, நான் பல மேடைகளில் கல்முனைத் தொகுதியெல்லாம் பிரச்சாரம் செய்து வந்தவன். மூன்று முறை தோல்வியடைந்த காரணத்தினாலும், கடந்த காலக் கிராமியக் கலவரம் காரணத்தினாலும், நான் கல்முனைத் தொகுதியில் போட்டியிட விரும்பவில்லை, என்று அல்ஹாஜ் மௌலானா எங்களது தலைமைப் பீடத்தை வேண்டிக் கொண்டார். ஆதலால் நாங்கள் டாக்டர் ஜனாப் ஏ. உதுமாலெப்பையை இம்முறை தமிழரசுக் கட்சிக் கல்முனைத் தொகுதி வேட்பாளராகப் போட்டுள்ளோம்.'

இவ்வாறு மருதமுனையில் ஹாஜியார் வளவில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.எம். இராசமாணிக்கம் அவர்கள் முழங்கினார்கள். மேலும் அவர்கள் பேசியதாவது:-


''நான் நோயினால் பீடித்துப் பேசவும் பிரச்சாரமும் செய்ய முடியாமல் வைத்திய சாலையில் படுத்த படுக்கையாகக் கிடப்பதாகவும், நான் உயிர் பிழைப்பது நிச்சயமில்லை எனவும் பலர் விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழ் பேசும் இனத்துக்காகப் போராடிவரும் என்று கட்சியினர் எந்தவித நோய்களையும், பசிபட்டினியையும் பெரும் கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் கடந்த இருபத்தோராண்டுகளாகப் பாடுபட்டு வருகின்றோம்.

நாங்கள் இப்படிப்பல அறப் போராட்டங்களை நடாத்தி பொலிஸாரினதும், இராணுவத்தினதும் ஆக்கினைகளால் இறந்தவர்களும் இம்சைகளுக்குள்ளானவர்களும் ஏராளம். ஏராளம். அரசாங்கம் எங்களின், மொழியுரிமை, நிலவுரிமை, கலை கலாச்சார உரிமைகளை எல்லாம் பூரணத்துவமாக நிறைவேற்றித் தரும்வரை நாங்கள் போராடிக் கொண்டே இருப்போம்.

கடந்த பல்லாண்டுகளாக டாக்டர் உதுமா லெப்பை எங்களின் கட்சியில் ஊறித் திளைத்துப் பல போராட்டங்களை நடாத்தியவர். தமிழ் பேசும் இனத்துக்காகவும். முஸ்லீம்களுக்காகவும் பாடுபட்டவர். உண்மையான கட்சிப் பற்றுள்ளவர். நேர்மையானவர். வீரம் கொண்ட இளைஞர். அறப் போராட்டங்களை நடாத்தி நமக்குத் தேவையான உரிமைகளைப் பெற்றுத் தரவல்லவர். ஆதலினால் தான் எங்கள் தமிழரசுக் கட்சியினர் கல்முனைத் தொகுதி வேட்பாளராக டாக்டர் ஜனாப் ஏ. உதுமா லெப்பையை இதோ உங்கள் முன்நிலையில் நிறுத்தியுள்ளோம்.

கல்முனைத் தொகுதி வாக்காளப் பெருமக்களே! நீங்கள் முன்பெலாம் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய எம்.பிக்கள் இதுவரை உங்களுக்குச் செய்த சேவைகள் ஏதேனும் உண்டா? அங்கே பாராளுமன்றக் கதிரைகளை நிரப்பிக் கொண்டு மாதமுடிவில் தமக்குரிய சம்பளத்தைப் பெறுவதிலே கண்ணும்கருத்துமாய் இருந்தனர். தனது கிராமத்துக்கோ, ஏனைய கிராம மக்களுக்கோ ஏதேனும் சேவை செய்ய விரும்பி இருந்தால் அந்தந்த உங்களது எம்பிக்கள் பாராளுமன்றக் கதிரையை விட்டெழுந்து அரசினரிடம்வாதாடியிருப்பர். நீங்கள் முன்பு அனுப்பிய எம்பிக்கள், எங்களின் தமிழரசுக் கட்சியின் வந்து வென்று, எங்களை ஏமாற்றியவர்கள், கல்முனைத் தொகுதி வாக்காளப் பெருமக்களை இப்போதும ஏமாற்ற வந்துள்ளனர்.

உண்மைக்கும் நேர்மைக்கும் கல்முனைத்தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் பாடுபட்டு உரிமைகளையும் இழந்து பறிபோன சகல தேவைகளையும் பெற்றுதரக் கூடிய ஒரே ஒரு இளைஞர் டாக்டர் உதுமா லெப்பை என்பதில் ஐயமே இல்லை. சாதிமதபேதமின்றி டாக்டர் உதுமாலெப்பையை ஆதரித்து அவரின் சின்னமாகிய வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு அதிகப்படியான வாக்குக்களால் வெற்றிபெறச் செய்யுங்கள். கடவுளின் திருவருளால் நிச்சயமாக இம்மாதம் 27ம் திகதி நள்ளிரவு நீங்கள் உதுமாலெப்பைக்கு வெற்றிமாலை சூடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.



## செல்வாவின் நேர்மைக்கு களங்கம் ஏற்படுத்த யாராலும் முடியாது!

— தார்சிவித்தாச்சி

தமிழர்கள் திறமை சாலிகள்—அத்தோடு மிகுந்த பொறுமையுடையவர்களும் கூட. அவர்களுடைய தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் நேர்மைக்கு பெயர் பெற்றவர்—இந்த அருங்குணம் அவருக்கு ஈட்டித்தரும் பெருமதிப்பை இல்லாது ஒழிப்பது முடியாத காரியம்.

-சிலோன் ஒப்சேவர் ஏட்டின் முன்னாள் ஆசிரியரான திரு. தார்சிவித்தாச்சி, தமிழரசுத் தந்தையைப்பற்றி எழுதும் போது, தமது அவசரகால நிலைமை 58 என்ற நூலில் மேற்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

ஆனால் இங்கோ பொய்மையின் தலைவரான பொன்னம்பலம் தமது நரம்பற்ற நாக்கினால் செல்வாவின் நேர்மைக்கு இழுக்குக் கற்பிக்கலாமென்று கருதி மந்திரிப் பதவிக்காகவே தமிழ் காங்கிரசிலிருந்து 1949ல் செல்வா பிரிந்தார் என்று மேடைகள் தோறும் பொய் சொல்லி வருகிறார்!

சந்திரனைப் பார்த்து நாய் குரைக்கிறது என்றாலும், நாய் ஒருபோதும் சந்திரனாகி விட முடியாது; நாய் நாய்தான்; சந்திரன் சந்திரன்தான்; இது மக்களுக்குத் தெரியும்.

### கல்குடாவின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பெருமையைப் பெற்றவர். தமிழரசின் சரித்திர முக்கியத்துவம் பெற்ற ''திருமலை யாத்திரை,''—'கச்சேரி மறியல்—'' 'ஸ்ரீ எதிர்ப்புப் போர்'சத்தியாக்கிரகம்' போன்ற நிகழ்ச்சிகளில் இவரின் பெயர் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியன; அக்காலத்தில் இவர் அரசினரால் வீட்டிலும், இராணுவ முகமிலும் சிறையிலடைக்கப்பட்டார்.

என்றாலும் இவரின் விடுதலைவேட்கை தணிந்திலது அதற்காக இவர் விளம்பரப்படுத்திக் கொண்டு எதையும் செய்வதில்லை. அமைதியாகவீண் ஆடம்பரம்எதுவுமின்றி இருந்து கொண்டே பல அற்புதமான காரியங்களைச் செய்வதில் மகாதிறமைசாலி.

திரு. பொ. மாணிக்கவசகரின் திறமைக்குச் சான்றாக ஈழத்தையே ஒரு தானியக் களஞ்சியமாக ஆக்கவல்ல பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடிய திட்டங்களை அவர் அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளதைக் குறிப்பிடலாம்.

அனால்தான் காணி—காணி அபிவிருத்து நீர்ப்பாசன அமைச்சாரகக் கூடிய ஆற்றல் பெற்றவர் என்று தமிழரசுத் தந்தையாலும் வேறு பெரியோர்களாலும் சிங்கள அறிஞர்களாலும் கூட இவர் புகழப்பட்டுள்ளார்.

கல்குடாவையும் கன்னித் தமிழையும் கண்ணின் மணிபோல் காக்கும் வல்லமை படைத்த இவரையே இம்முறை கல்குடா தொகுதி மக்கள் தேர்ந்தெடுப்ப என்பதில் துளியும் ஐயமில்லை—

### தமிழரசுக் கட்சிக்கே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாலாகாத தனத்தைக் காட்டி வருகின்றனர்.''


இவ்வாறு 9-5-1970 அன்று தம்பலகாமம் கோணேசராலய முன்றல் முன் நடந்த கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பான மூதூர் வேட்பாளர் திரு. தங்கத்துரை அவர்கள் கூறினார்; ஏராளமானோர் முன்னிலையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்!

''மூதூரில் இரண்டாவது பெரிய தொகையினராயிருந்த தமிழர்களை மூன்றாவது தொகையினராக்கிவிட்ட இந்தச் சீமான்கள் இருவரும் தாங்கள் செய்த துரோகம் போதாதென்று இன்னும் தமிழ் மக்களைக் கூறு போட முனைகின்றனர். 11,000 தொகையினரான தமிழ் மக்களிடம் 19,000 தொகையினரான அவர்கள் வாக்குக் கேட்கின்றார்கள் என்றால்...? இவர்களின் சூழ்ச்சிக்கு என்றுமே தமிழ் மக்கள் ஏமாந்து விடக் கூடாது.

மூதூர் முதல்வராகத் தங்கத்துரை வரவேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் இரு வாக்குகளையும் தமிழரசுக் கட்சிக்கே அளிக்கவேண்டும்; அல்லது சிங்களவர்களின் செல்லப் பிள்ளைகளில் ஒருவர்தான் மூதூர் முதல்வராக வேண்டிவரும்.

கட்சிக்கொள்கைகளை முன்வைக்கத் துணிவில்லாத இவர்களிடம் தமிழ் மக்கள் ஏமாந்து விடாது தங்கள் வாக்குகளை நல் வழியிற் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்'' என்று கூறினார்.

இக்கூட்டத்தில் தம்பலகாமம் கிராமசபைத் தலைவர், கட்டைபறிச்சான் கிராம சபைத் தலைவர், ஈச்சிலம்பத்தை கிராம சபைத் தலைவர் போன்ற பலர் உட்பட திருக்கோணமலை வேட்பாளர் பா. நேமிநாதன். கிளிநொச்சி அடலேறு ஆலால சுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்,



## அத்தானின் மண்டபம்

கண்ணே,

நீ கூறியது போல் கடிதத்தை எழுதி மண்டபத் தூணின் பக்கத்தில் வைத்து விட்டு அவசரமாக சாவகச்சேரிக்குப் புறப்படுகிறேன்...எடுத்துப்படி!

நாம் இருவரும் உரையாடுவது மிகவும் இன்பமானது. ஆனால் மிக மிக அவசரமாக சாவகச்சேரிக்கு நான் போவதால் இன்று உன்னைச் சந்திக்க முடியவில்லை. மன்னித்து விடு கண்ணே.

அது சரி... நான் ஏன் சாவகச்சேரிக்குப் போகிறேன் உனக்குத் தெரியுமோ?

இந்த உலகத்திலேயே ஒரு மாபெரும் தொழில் நுட்ப நிபுணர் திலகம் சாவகச்சேரித் தொகுதியில் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்த மாபெரும உலக மனிதனைப் பார்க்க தவியாய்த் தவித்து ஓடிப்போகிறேன்.

ஒரு தமிழன் பெரிய உலகத் தொழில் நுட்ப மேதையாக இருபபது நமக்குப் பெருமைதானே?

கண்ணே, யார் அப்படி ஒரு மேதை என்று கேட்கிறாயா? அவர்தான் கண்ணே சாவகச்சேரி வி. குமாரசாமி!

உனக்குத் தெரியுமா? மகாவலிகங்கையைத் திசைதருப்புவது பற்றி யூகோசிலேவிய நிபுணர்கள் குறிப்பிடும்போது இத் திட்டம் முடிவுபெற குறைந்தது முப்பது ஆண்டுகளாவது எடுக்கும் என்று கூறினார்கள். ஆனால் நமது உலகத் தொழில் நுட்ப திலகம் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமோ?

''என்னைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள் மூன்றே மூன்று ஆண்டுகளில் யாழ்ப்பாணத்துக்கு மகாவலிகங்கையைக் கொண்டு வருகிறேன்!'

என்று பொதுக் கூட்டமொன்றில் மார்தட்டிக் கூறியிருக்கிறார் நமது மேதை!

கண்ணே,

நான் உன்னைப் பிரிவது உனக்கு வேதனையாக இருக்கலாம். கோபிக்காதே...நாளை மறு நாள் உன்னைச் சந்திக்க வந்து விடுவேன். இப்போது உலகத் தொழில் நுட்ப திலகத்தைச் சந்திக்க அனுமதி தா!

கண்ணே,

என்னடி...கடிதத்தை வைத்த கண் வாங்காமல் படிக்கிறாயா? உன் கண்கள் சிவந்து கோபம் பொங்கி வெடிக்கிறதா...? போடி பைத்தியக்காரி... நானாவது குமாரசாமியை சந்திப்பதாவது...மண்ணாங்கட்டி!

இப்போது உண்மையைச் சொல்லட்டுமா? சாவகச்சேரி நவரெத்தினத்துக்கு வேலை செய்யப் போகிறேன் கண்ணே... எங்கே சிரி...!

அன்பு
அத்தான்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 14-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்